ASTAMIPPIRATAKKINA.—
CONNEMARA PUBLIC LIBRARY
MADRAS
28 AUG 1956

உ

திருச்சிற்றம்பலம்.

# அஷ்டமிப்பிரதக்ஷிண மான்மியம்

Tr by: Iramacuvami Pillai (E)

**மதுரை, இ. இராமசுவாமிப் பிள்ளை**

என வழங்கப்பட்ட

**திரு. ஞானசம்பந்தப் பிள்ளை அவர்களால்**

**மொழிபெயர்க்கப்பட்டது.**

Ed by CUVARNAKALICICURAN (Cu)

காளையார்கோவில்

**வித்துவான். திரு. சு. சுவர்ணகாளீச்சுரன்**

அவர்களால் பதிப்பிக்கப்பெற்று

காளையார்கோவில், அறுபத்துமூவர் திருமடம்

**திருவாளர் முரு. ராம. சுப்பிரமணியஞ் செட்டியார்**

**அவர்கள் பாரியாரால்**

வெளியிடப்பட்டது.

**1954**

CONNEMARA PUBLIC LIBRARY
28 AUG 1956
MADRAS
579
R.B. 1-54

உ

திருச்சிற்றம்பலம்.

பொன்னு மெய்ப் பொருளுந் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப்பானைப்
பின்னையென் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்னதன்மையன் என்றறியொண்ணு எம்மானை
எளிவந்த பிரானை
அன்னம் வைகும்வயற் பழனத்தணி
யாரூரானை மறக்கலுமாமே.

திருச்சிற்றம்பலம்.

56771
198242
3/8
823:226x
31.J4

பாரதி அச்சகம், குடந்தை.

S.V. 82

CONNEMARA PUBLIC LIBRARY
28 AUG 1956
MADRAS

உ

முருகன் துணை.

# முகவுரை.

திருச்சிற்றம்பலம்.

அண்ணல் ஆலவாய் நண்ணி னான்றனை
எண்ணி யேதொழத் திண்ணம் இன்பமே.

திருச்சிற்றம்பலம்.

"பாண்டிநாடே பழம்பதி" என்று திருவாதவூரடிகளால் சிறப்பிக்கப்பெற்ற பாண்டிநாட்டுள், பூலோகசிவலோகம், சிவராசதானி முதலிய திருநாமங்களைப் பெற்று விளங்குவதும், சொல்வடிவாகிய ஸ்ரீ மீனாட்சியம்மை தடாதகைப் பிராட்டியாராகியும் பொருள் வடிவாகிய ஸ்ரீ சோமசுந்திரக்கடவுள் சுந்தரபாண்டியராகியும், முருகக்கடவுள் உக்கிரபாண்டியராகியும், அரசாட்சி செய்த பெருமைமேவியதும், ஸ்ரீசோமசுந்திரக்கடவுள் அறுபத்துநான்கு திருவிளையாடல்களைச்செய்த ஏற்றமுடையதும், தமிழை வளர்த்த பெருமை வாய்ந்த பாண்டியமன்னர்களால் செங்கோல் செலுத்தப்பெற்றதும், இறைவனையே தம்முள் ஒருபுலவராகப்பெற்ற சங்கப்புலவர்கள் பலர் தமிழாராய்வதற்கு இடமாய் அமைந்ததும் மதுரையம்பதியேயாகும்.

இத்தகைய மதுரையம்பதியின் கண்ணே, நிகழ்ந்த, "அஷ்டமிப்பிரதக்ஷிணமான்மிய"மானது, அநாதிமல முத்தசித்துருவாயும், பெருங்கருணைத்தடங்கடலாயுமுள்ள சிவபெருமான் அநாதிமலபெத்தர்களாகிய ஆன்மாக்களெல்லாம் உய்யும்பொருட்டு, உமாதேவியாருக்கு அருளிச்செய்யப்பட்டது.

இவ்வரலாறு கந்தபுராணத்திலுள்ள பிரமசங்கிதையில், முப்பத்து நான்காம் அத்தியாயத்திலே கூறப்பட்டுள்ளது. இவ்வரலாற்றைத் தமிழிலே மொழிபெயர்த்துத்தந்த பெரியார், **மதுரை இராமசாமிப் பிள்ளையவர்களாவார்கள்**. பிள்ளையவர்கள் இராமநாதபுரத்தினர். இராமநாதபுரம், சேதுபதி அரசர் பொன்னுச்சாமித் தேவருக்கு உசாத்துணையாகஇருந்துவந்தவர். பரம்பரைச் சைவ வேளாளமரபினர். திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவான் ஸ்ரீ-ல-ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடைய மாணாக்கராவார். இவருடன் பயின்றோர் தேவகோட்டை வன்றொண்டச் செட்டியாரவர்கள், ஸ்ரீ (பேட்டை) நமச்சிவாயத் தம்பிரான் சுவாமிகள் முதலியோராவார். மகாவித்துவான் பிள்ளையவர்களியற்றிய ஆற்றூர் புராணம், வாளொளி புற்றூர் புராணம், விளத்தொட்டி புராணம் ஆகிய மூன்று புராணங்களையும் அப்பொழுதப்பொழுது எழுதி உபகரித்தவர் நமது இராமசாமிப் பிள்ளையவர்களாவார்கள்.

திருவாவடுதுறையில் படித்துவரும் பொழுது அடிக்கடி சிதம்பரம் சென்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல

ரவர்களைப்பார்த்து அளவளாவிவருவார். அதனால் இராம சாமிப்பிள்ளைக்கும் நாவலர் அவர்களுக்கும் நல்லபழக்கம் உண்டாயிற்று. நாவலர் பெருந்தகை 'திருக்கோவையார்' 'திருக்குறள்' முதலிய நூல்களை அச்சிட்டு வெளிப்படுத் தியதற்கும், அப்பதிப்புக்களுக்கு மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களும், அவருடைய மாணுக்கர்களும் சிறப்புப்பாயி ரம் அளித்தமைக்கும் மூலகாரணமாக இருந்து ஆவன செய்தவர் நமது பிள்ளையவர்களாவார்கள்.

நாலாந்தமிழ்ச்சங்க ஸ்தாபகராகிய பாலைவனத்தம் ஜமீன்தார் பாண்டித்துரைத்தேவரவர்கட்குத் தமிழறி வுறுத்திய ஆசிரியர்கள் மூவரில் நமது பிள்ளையவர்களும் ஒருவராவர். மற்றய இருவர் ஸ்ரீ பழனிக்குமாரத்தம்பி ரான் சுவாமிகள் (மூவலூர் மடபதி), அழகிரிராஜு என் போராவர். மதுரையாதீன வித்துவானுக விளங்கிய சுப்பிரமணிய பிள்ளையவர்களும், நமதுபிள்ளையவர்களின் மாணுக்கராவர்.

பின்பு திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை யாதீனம் 16-வது பட்டம், மேலகரம், ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிர மணிய தேசிக குருமூர்த்திகள்பால் நிருவாண தீக்கை பெற்று, ஞானசம்பந்தப் பிள்ளையெனத் தீட்சா நாமம் பெற்றனர். ஷை குருமகாசந்நிதானம் கட்டளையிட்டரு ளியபடி மூவர் முதலிகளருளிய தேவாரப் பதிகங்களை முதன் முதலாகத்தலவரிசை முறையில், சின்னப்பட்டம் (பேட்டை) ஸ்ரீ நமச்சிவாய தேசிகர் முன்னிலையில் பரி சோதித்துப் பதிப்பித்தவர்கள் நமது பிள்ளையவர்களே

யாவார்கள். இதனைப் பதிப்பித்தற்குப் பெரிதுங் காரணமாயிருந்தவர்கள், திருப்பனந்தாள் காசிமடம், காசிவாசி ஸ்ரீ இராமலிங்க சுவாமியவர்களும், காசிவாசி ஸ்ரீ குமாரசாமி சுவாமியவர்களும் ஆவார்கள் (கி. பி. 1880 முதல் 1894 வரையினும் காசிமடத்து அதிபர்களாகயிருந்தவர்கள்.)

17-வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அம்பலவாணதேசிக சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி 1897-ல் மெய்கண்ட சாத்திரம் முழுவதையும் மூலமும் உரையுமாக, திருவாவடுதுறை யாதீனத்து ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு பரிசோதித்துச் செப்பஞ்செய்து காஞ்சி நாகலிங்க முதலியாரைக் கொண்டு பதிப்பித்தருளினர். அவ்வாறே மகாசந்நிதானத்தின் கட்டளைப்படி, ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் அருளிச்செய்த பிரபந்தங்களைத் தொகுத்து, நந்தன ஆவணியில் இரண்டாம் பதிப்பாக அச்சிடுவித்தனர். இதன் முதற் பதிப்பை பாண்டித்துரைத்தேவரவர்கள் விரும்பிய வண்ணம் நமது பிள்ளையவர்களே அச்சிட்டனர். பின்பு காஞ்சி புராணத்தைச் சிறந்தமுறையில் அச்சிட்டு வெளிப்படுத்தினர். அப்பதிப்பில் மாதவச் சிவஞானயோகிகளது வரலாற்றினை விரித்து எழுதியுள்ளார். கவிராக்ஷஸ, ஸ்ரீ கச்சியப்ப முனிவர் பிரபந்தங்களை, ஆதீன வித்துவான், விசுவலிங்கத் தம்பிரான் சுவாமிகளுடன் சேர்ந்து வெளியிட்டனர். பேரூர் புராணம் அச்சிடுவித்தனர். கச்சியப்ப முனிவரது வரலாற்றினை விரிந்த முறையில் எழுதி உபகரித்தார்கள்.

பின்பு மதுரையாதீனத்து வித்துவானக அமர்ந்து, மீனட்சிசுந்தரம் பிள்ளையவர்களை, ஆதீனமடாலயத்திற்கு வருவித்து, "திருஞானசம்பந்தர் பதிற்றுப் பத்தந்தாதி" "திருஞானசம்பந்தர் ஆனந்தக்களிப்பு" ஆகிய நூல்களை இயற்ற ஏற்பாடு செய்தனர். "சிவாலயதரிசன விதி" என்னும்நூலை செய்யுள்நடையில் இயற்றியும், வடமொழியிலுள்ள பத்தருஹரிசதகங்களை தமிழிலேமொழிபெயர்த்தும் தமதுஆசிரியர் மீனட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் காட்டிச் சிறப்புப்பாயிரம் பெற்றனர். கம்பரந்தாதி, முல்லையந்தாதி, திருவிளையாடற்புராணம்முதலியவற்றிற்கு உரையும் எழுதியுள்ளார்கள். இறுதிவரையில் இப் பெரியார் நைட்டிக பிரமச்சாரியாகவே வாழ்ந்து வந்தனர்.

இவர்கள் அறுபது ஆண்டுகளுக்குமுன் மதுரையாதீனத்து, ஸ்ரீ அம்பலவாண சுவாமிகள் விரும்பிய வண்ணம் இம்மான்மியத்தை மொழிபெயர்த்துப் பதிப்பித்தனர். அப்பதிப்பு இப்பொழுது கிடைப்பது அரிது. ஆதலின் "**காளையார்கோவில் அறுபத்துமூவர் திருமடம், ஸ்ரீமான் முரு. ராம. சுப்பிரமணிஞ் செட்டியாரவர்கள் பாரியார்** இதனை இலவசவெளியீடாக வெளியிட முன்வந்தனர். அவர்களுக்கு சைவஉலகம் பெரிதுங் கடப்பாடுடையது.

எளியேனை இப்பணியில் ஈடுபடுத்திய **சைவ சித்தாந்த பூஷணம் ஸ்ரீ சுவாமிநாதயோகியாரவர்கட்கும்,** மற்றுமுதவிய பெருமக்களுக்கும் தோன்றாத்

துணையாயிருந்து திருவருள் புரியும் முருகப்பெருமானது பொன்னுரிணையடிக்கமலங்கட்கும் எனது அன்புகலந்த வணக்கத்தினை மனமொழிமெய்களால் செலுத்து கின்றேன்.

இங்ஙனம்,

**சு. சுவர்ணகாளீச்சுரன்.**

மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க !
சிவஞான மாதவன் சேவடிவாழ்க !

... PUBLIC LIBRARY
28 AUG 1956
MADRAS

உ
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்.

கந்தபுராணத்திலே, பிரமசங்கிதையிலே, முப்பத்துநான்காம் அத்தியாயத்திலே, குருகீதையிலே, சிவபிரான் உமாதேவியாருக்கு அருளிச்செய்ததாக ஒரு ஆசாரியர் மாணாக்கன்பொருட்டு அருளிய

# அஷ்டமிப்பிரதக்ஷிணமான்மிய மொழிபெயர்ப்பு.

## சிவபெருமான் வணக்கம்

மலர்தலையுலகில் நிலவியஉயிர்கள்
மருவிய பிறப்புஇறப்பகன்று,
பொலிவுறு முத்திக்கரைசெறியுபாயப்
புணையினை அருளென வினவு,
நலவருளுருவக் கயற்கணுமைக்கு
நமதருட்குறிகுருபூசை
யிலகுறச்செயலென் றிறையருளிறைவன்
இணையடிதொழுது வாழ்ந்திடுவாம்.

விராட்புருஷனுக்குத் துவாதசாந்தஸ்தானமாகக் கொள்ளப்பெற்ற மதுரையம்பதியிலே, சிவபெருமான் பரமகுருமூர்த்தியாக எழுந்தருளி இருக்கும்பொழுது உமாதேவியார் வணங்கி, சுவாமீ! "உயிர்கள் கருப்பத்திலேதங்கிப்பிறப்பதும் பின்பு இறப்பதும் பெருந்துன்பத்திற்கும் பெரும் பயத்துக்கும் ஏதுவாதலால், இப்பிறப்புஇறப்புக் கடலைக்கடந்து முத்திக்கரையை அடைதற்கும்,

மறைவாகவும் வெளியாகவும் செய்யப்பெற்ற பாவங்களை எளிதாகக் களைதற்கும் உரிய உபாயத்தை அருளிச்செய்ய வேண்டும்" என்று உயிர்களின்மீதுள்ள கருணையினலே சிவபிரானிடத்தே விண்ணப்பம் செய்ய அதற்கு அச்சிவபிரான் திருவாய்மலர்ந்தருளுவாராயினர். எங்ஙனமெனில், ஹே தேவீ! நம்முடையமகாதேவ சப்தத்தை உச்சரித்தலால் பெருங்கொடும்பாவங்களெல்லாம் கெடும். நம்மைப் பூசித்ததனுலும், நம்மையுணர்த்தும் ஆசாரியன் அடிமலரை வணங்குதலாலும் நெருப்பிட்ட பஞ்சுப்பொறிபோலப் பாவங்கள் கெட்டொழியும். இன்னும் பெரும்பாதகங்களும் பிறவியும் போதற்குரிய உபாயம் வேதத்திற் கூறப்பட்டிருக்கிறது.

அதாவது:-

சம்பூத்தீவின் மத்தியில் மேரு மலை உள்ளது. அம்மேரு மலையின் நாற்புறத்தும் நான்கு மலைகள் உள்ளன. அம்மேரு மலைக்கும் சூழவிருக்கும் மலைகளுக்கும் இடையேயுள்ள வெளிக்கு இளாவிருத கண்டமென்று பெயர். அதற்குத்தெற்கிலுள்ள நிடதமலை கீழ்கடல் மேல்கடல்களைத் தொட்டுக்கொண்டிருக்கிறது. அதற்குத் தெற்கே அரிவருடமென்கிற கண்டம் இருக்கிறது. அதற்குத் தெற்கே ஏமகூட மென்கின்ற மலை நிடதமலை போலவே இருக்கிறது. அதற்குத் தெற்கே கிம்புருட வருடமென்கிறசிறந்தகண்டம்

இருக்கிறது. அதற்குத் தென் பாகத்தில் மலைகளிற் சிறந்த இமயமலை இருக்கிறது. அம்மலையில் இமவான் என்னும் மலையரசன் மேனை என்னும் மனைவியோடிருந்தான். அவ்விருவரும் உமாதேவி சமேதராகிய பரமசிவனை உணர்ந்து அப்பெருமான் மாட்டமர்ந்த இருதய கமலத்தோடு கூடியவர்களாயிருந்தார்கள்.

அப்பொழுது சிவபக்தரும் யோகியும் தவமுனிவருள்ளே சிறந்தவருமான துர்வாச முனிவர் அவ்விமயமலையில் அமர்ந்தருளிய கேதார நாயகரைப் பூஜைசெய்வதற்கு வந்தார். அங்ஙனம் வந்த முனிவரைச் சிவத்தியானம் உள்ள மலையரையனும் மேனையும் வணங்காமல் மலைபோல அசையாது சும்மாயிருந்தனர். உடனே அம்முனிவர் கோபங்கொண்டு, அவ்விருவரையும் நோக்கி "உங்களுக்கு மானுடப்பிறப்பு உண்டாகக்கடவது" என்று சபித்துவிட்டனர். அப்பொழுது பயத்தினாலே மனைவியோடு மலையரையன் அம்முனிவரர்பாதங்களிலே விழுந்து வணங்கி எழுந்து பிரார்த்தித்த பொழுது, அம்முனிவர் கருணை கூர்ந்து மகிழ்ந்து, அம்மலையரையனை நோக்கி, "பூமியிலே சிவபக்தியிற் சிறந்த ஒரு அரசனுக்கு நீ புத்திரனாகப் பிறக்கக்கடவாய். உன்னுடைய பிதாவுக்குச் சமமான வமிசத்திலே உன்னுடைய பத்தினிக்கும் மனிதப்பிறப்பு உண்டாகக்கடவது.

நீ அநேக சோமயாகங்களினலே சிவபிரானை ஆராதித்து, மேனையை விவாகம்பண்ணி இல்லறத்திலிருந்து, தொண்ணூற்றென்பது அசுவமேத யாகம் செய்து, பின்பு புத்திரகாமேஷ்டியாகம் செய்யும்பொழுது, சிவாக்ஞையினல், சிவபெருமான் திருமேனிப்பாதியில் அமர்ந்தவரும் சித்துரூபருமான உமாதேவியார், அக்கினி குண்டத்தினின்றும் தோன்றி உனக்குப் புத்திரியாராக ஆவர். சிவபிரான் அப்புத்திரியாரைத் திருமணம் புரிந்து, உனக்கு மருகரும் பாண்டியராஜருமாவார். அங்ஙனம் மகிமையோடு சுகங்களை நுகர்ந்து, இறுதியிலே பத்தினியோடு நீ முத்தியடைவாய் " என்று பிரதிசாபமிட்டுப்போய், அத்துருவாச முனிவர் அக்கேதாரேசுவரரைப் பூஜித்துக் கொண்டிருந்தார்.

அதன்பின்பு, மலையரையன் தனக்கு ஆசாரியராகிய கண்ணுவமுனிவரைக் கண்ணுற்று, தன்னுடைய பத்தினியோடும் வணங்கி எதிரிலே நின்றன். அம்முனிவர் ஞான நோக்கினல், நிகழ்ந்தவைகளை யுணர்ந்து, மலையரையனை நோக்கி, 'நீ அடைந்தசாபம் எல்லா உலகங்களுக்கும் நன்மையாகவே இருக்கிறது. நீ இப்பொழுது ஸ்ரீ காசி க்ஷேத்திரம் சேர்ந்து அகஸ்திய முனிவரைத் தரிசித்து வணங்கி, அவர் அருளிச் செய்யும் வழியே ஒழுகுவாயாக' என்று சொல்லியருளினர்.

உடனே அம்மலையரையன் மனைவியோடும் ஸ்ரீ காசிப்பதி சேர்ந்து கங்காநதியிலே மூழ்கி, விசுவேசரையும், விசாலாட்சிதேவியாரையும், வயிரவக்கடவுளையும் விதிப்படி அன்புடன்பூசித்து வணங்கித்துதித்து, வலம் வந்த பின்பு அவ்விசுவேசர் சந்நிதிக்குத் தென் புறத்துள்ள முத்தி மண்டபத்தின் மத்தியிலே அநேக முனிவர்குழாங்களாற் சூழப்பெற்று வீற்றிருக்கும் அகஸ்திய மகா முனிவரைத்தரிசித்து பஞ்சாங்க அஷ்டாங்க நமஸ்காரங்களால் அவருடைய திருவடிகளை வணங்கி, தனக்கு நேர்பட்ட சாபமுதலியவற்றை விண்ணப்பம்செய்தான். அதற்கு அகஸ்திய மகா முனிவர், பேரருளோடு மலையரையனை நோக்கி "துர்வாச முனிவர் சாபமானது உலகத்திற்கும் உனக்கும் நன்மையைச்செய்யத்தக்கதே" என்று சொல்லியருளினர். அங்ஙனம் அருளியதைக் கேட்ட மலையரையன், அகஸ்திய மகாமுனிவரை வணங்கி, "எனக்கு எத்தேசத்திலே மாநுடப் பிறவியுண்டாகும். அதனை அருளிச்செய்யவேண்டும்" என்று கேட்க, அதற்கு அம்முனிவரார் இலக்ஷயோசனைவிசாலமுள்ள சம்பூத்தீவின் மத்தியிலே, மேருமலையுள்ளது. அதற்குத் தெற்கே உன்னுடைய இமயமலைக்கும் தென் கடலுக்கும் இடையில் ஒன்பதினயிரம்யோசனை விசாலமுள்ள பாரத வருஷத்திலே, பரதகண்டத்திலே, ஐம்பத்தாறு தேசங்கள் உள்ளன. அவைகளிலே, பிராமணர் முதலானவர்கள் தங்கள் தங்கள் வருணச்

சிரமதருமங்களிலே வழுவாமல் யாகாதிகளும், தியானுதிகளுஞ் செய்துவருகின்ருர்கள். சுயம்பு மூர்த்தி முதலாகிய பரார்த்தலிங்கங்களையும் உமா தேவியாரையும் சிவாகம விதிப்படி பூசித்தற்குரிய வர்கள் பூசித்து வருகின்ருர்கள். தங்கள் தங்கள் கிருகங்களிலே வாணலிங்கம் படிகலிங்கம் முதலிய வற்றிலே வேதசிவாகம விதிப்படி ஆன்மார்த்த பூசைக்குரியவர் ஆன்மார்த்த சிவபூஜை செய்து வருகிருர்கள். அத்தேசங்களிலே சோழதேசம் சிவபிரானுக்கு இடக்கண் போலும், சேரதேசம் வலக்கண்போலும், பாண்டியதேசம் சோதிமய மாகிய நடுக்கண் போலும் உள்ளன. அப்பாண் டியநாட்டில், குலசேகர பாண்டியனென்னும் அர சன், பிரபுவாய், எப்பொழுதுஞ் சைவாச்சாரங் களை அநுட்டிக்கின்றவனுய், சிவலிங்காராதனம் செய்கின்றவனுய், குடிகளைக் காப்பதில் முயற்சி உள்ளவனுய், சமஸ்தயாகங்களையும் செய்தவனுய், சூரனுய், ஏகச்சக்கராதிபதியாய், மதுரைமாநகரத் திலே அரசாண்டு வருகின்ருன். அவனுக்குப் புத்திரன் இன்மையால் ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசு வரரைத் தினந்தோறும் மகிழ்ச்சியோடுதரிசித்து அப்புத்திரப் பேற்றின் பொருட்டுப் பிரார்த்தித் துக் கொண்டிருக்கிருன். அம்மதுராபுரியின் மகிமை எனக்குமாத்திரம் தெரியும். மற்றெருரு வருக்கும் தெரியாது. அம்மகிமையிற் சிறிது கேட்பாயாக. எங்ஙனமெனில், அத்திருப்பதியிலே அறுபத்துநாலு கலைகளுஞ் சித்தியாகின்றன.

பிரமதேவருடைய பரிமேதவேள்வி முடிவிலே சாபம் பெற்ற சரசுவதிதேவியின் அம்சபூதர்களான சங்கப்புலவர்கள் அனைவரும் சமஸ்த தேசங்களிலுஞ்சஞ்சரித்துப் பின்பு மதுராபுரியை அடைந்தனர். அவர்களுடைய சித்தங்களும், வித்தைகளும் பெரிதுந்தெளிவு பெற்றுள்ளன. அவர்கள் அநேகதேசங்களிலே தனித்தனி அவதரித்தவராயினும் நெடுங்காலம் அம்மதுரைச் சங்கத்திலே அனைவருங்கூடி அமர்ந்தனர். மற்றைய நகரங்கள் வியஷ்டி ரூபமாயுள்ளன. மதுரைமாநகரம் சமஷ்டிரூபமாயுள்ளது. அந்த க்ஷேத்திரமான்மியத்தைக் கேட்பதினால் பாவக் கூட்டங்கள் நாசமடைகின்றன. அப்பதியிலே வதிகின்ற மானுடர் ஜீவன் முத்தர்களே; அதில்ஐயமில்லை. அம்மதுரையம்பதிக்குக்கிழக்கே புஷ்பவனமும், தெற்கே சத்தியகிரியும், மேற்கே ஸ்ரீ பத்திரிகாபுரமும், வடக்கே இடபகிரியும் ஆகிய க்ஷேத்திரங்கள் உண்டு. அவ்விடபகிரியில் முருகக்கடவுளின் பாதசரத்திலிருந்து ஒரு நதி யுண்டாகி இருக்கிறது. அதற்கு நூபுர கங்கை யென்னும் பெயர் உலகத்திலேபெரிதும் வழங்கப் படுகிறது. அம்மலையின் கீழ்ப்பிரதேசத்தின் அருகே விஷ்ணுமூர்த்தி பரமசுவாமி என்னும் பெயருடன் பிரசித்தியோடு வசித்து, அப்பருவதத்தில் அமர்ந்தருளும் முருகக்கடவுளை இருதயத்திலே தியானித்துக் கொண்டிருக்கின்றனர். இங்ஙனம் மேலே கூறிய புஷ்பவன முதலிய

நான்கு க்ஷேத்திரங்கள் புடைசூழப்பெற்று நடு நாயகமாய், மிகப்பரிசுத்தமாய், அதிரகசிமாயுள்ள மதுரை நகரம் ஸ்ரீ சக்கரவடிவாயிருக்கிறது. அத னடுவே விந்துவிருக்கிறது. அவ்விந்துவினடுவே சாமள பீடத்தில் ஸ்ரீ மீனாட்சிதேவியார் எழுந் தருளி இருக்கிறார். அந்த விந்துவின் ஈசான திசையிலே காமேசரென்னும் பரமசிவன் சுந்த ரேசரென்னும் பெயருடன் மூலலிங்கநடுவே அமர்ந்தருளியிருக்கின்றார். அவ்விந்துவின் புறத் திலுள்ள முக்கோணத்துக்கு ஆடிவீதியென்றும், அதன் புறத்தேயுள்ள அஷ்டகோணத்திற்குச் சித்திரை வீதி என்றும், அதன் புறத்தேயுள்ள தசகோணத்திற்கு ஆவணி வீதி என்றும், அதற்குப்புறத்திலுள்ள பதினான்கு கோணத் திற்கு மாசிவீதி என்றும், அதற்குப்புறத்திலுள்ள அஷ்டதளங்களுக்குத் தை வீதியாகிய கோட்டை வீதி என்றும் பெயர் உண்டு. அதற்குப்புறத்தே பதினாறு ஸ்தானங்களில், இந்திராதிலோகபால கர்களாலே சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கின்றன. அதற்குப் புறத்தே யுள்ள மூன்று விருத்தங்களிலே, யோகினிகளும், வயி ரவக்கடவுள் முதலானவர்களும் இருக்கின்றார்கள். அந்நகரத்து நான்கு வாயில்களில் மேற்கூறிய வாறே கிழக்கே திருப்பூவணமும், தெற்கே திருப் பரங்குன்றமும், மேற்கேதிருவேடகமும், வடக்கே இடபகிரியுமான நான்கு ஸ்தலங்கள் இருக்கின் றன. பிரசன்ன ஸ்ரீ புரமென்னும் இந்நகரத்

துக்குப் பண்டிதர்கள், மதுரை, நீபாரணியம், முதலான திருப்பெயர்கள் சொல்லுகின்றார்கள். சிதம்பரம் முதலான சிவ க்ஷேத்திரங்களிலே, போகாங்கமாகிய பள்ளியறைக் காலத்திலே, அம்சபூதச் சொக்கரென்று சொல்லப்படுகிறார். இந்த ஸ்ரீ சக்கரமாகிற திருவாலவாயின் கண்ணே போகாங்க மாகிய பள்ளியறைக் காலத்திலே, காமேசுவரரே பள்ளியறைச் சொக்கராக விருக்கிறார். அந்தச் சொக்கர் காமேசுவரியாராகிய மீனாட்சி தேவியாராலே இப்பொழுதும் எப்பொழுதும் சேவிக்கப்படுகிறார். அம்மீனாட்சிதேவியாருக்குக் காலபேதத்தினாலே அஷ்டமூர்த்தி பேதமுண்டு. எப்படியெனில், பிராதகாலத்தில், பாலை என்றும், ஆறுநாழிகை முதல் ஏழு நாழிகை வரையில், புவனை என்றும், பன்னிரண்டுநாழிகை முதல் பதின்மூன்று நாழிகை வரையில், கௌரி என்றும் மத்தியானகாலத்தில், யாமளை என்றும், சாயங்காலத்தில் மாதங்கி என்றும், அர்த்தயாம காலத்தில், பஞ்சதசி என்றும், பள்ளியறைக்கு எழுந்தருளும் காலத்தில், சோடசி என்றும், மீட்டும் திருவநந்தலில், சுவாமி பள்ளியறையினின்று எழுந்தருளுஞ் சமயத்திற்குமுன், மகா சோடசி என்றுமாம். ஆகையால் போகாங்கமாகிய அத்திருவநந்தல் சமயத்தில், மானுடருக்குத் தரிசனம் கிடைத்தல் அருமையாம். அத்திருவநந்தல் தரிசனஞ் செய்யாதவர்களுக்குப் பாபமோசனம் உண்டாகாது. இம்மதுரை பிரசன்ன

ஸ்ரீபுரமானதால், தேவியார் ஆராதனம் முதலிலே செய்யவேண்டும். அங்ஙனஞ்செய்யாவிடில், காமேசர் பெரிதுங் கோபங்கொள்ளுவார். பூஜாதிரவியங்களெல்லா வற்றையும் இரண்டாகப் பிரித்து முதலிலே தேவியாருக்கு அபிஷேக முதலியன நடாத்தி ஆராதனைசெய்தபின்பு, பிற்பாகத்தைக் கொண்டு காமேசருக்கு ஆராதனஞ் செய்தல் வேண்டும். இங்ஙனம் உலகங்களுக்கு அம்மையப்பராகிய இருவருக்கும் ஆராதனம் நடத்த முடியாதவர்கள். அம்மைக்கு மாத்திரம் ஆராதனை நடத்துவதே அமையும். குளாகமத்திற் கூறப்பட்ட பூஜை இத் திருவாலவாய்க்குப் புறத்தேயுள்ள இடங்களிலே செய்யத்தக்கது. இத்திருவாலவாயினிடத்தே சித்தாந்தமாகிய காமிகாதி சிவாகமங்களினுலே ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரருக்குப் பூஜை செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

நியாசமும், அர்ச்சனையும், நவாவரண பூஜையும் அவசியஞ் செய்யவேண்டும். இவையன்றி மற்றவைகளெல்லாம் காமிகாதியாகமப்படி செய்ய வேண்டும். இங்ஙனம் மீனுட்சி தேவியாருக்குக் காமேசுரராலே அருளிச் செய்யப்பட்டது. அதை உனக்குக்கூறினேன். ஆகையால் அம்மையை முதலிலே பூஜித்துப் பின்பு சுந்தரேசுவரரைப் பூஜிக்கவேண்டும். இந்த க்ஷேத்திரத்திற்கு ஒப்பானதுஒன்றுங்கிடையாது. இப்பதியிலே குலசேகர

பாண்டியனுக்கு மகிழ்ச்சியோடு நீ புத்திரனாகக் கடவாய். உன்னுடைய பத்தினி சோழ ராஜனுக்குப் புத்திரியாகக் கடவது. நீ அந்தப் பெண்ணை மணந்து மதுரையம்பதியை ஆளுவாய்" என்று திருவாய்மலர்ந்து அகஸ்திய மகா முனிவர் சிவத்தியானஞ் செய்து கொண்டிருந்தார்.

பின்பு அவ்வாறே மலையரையன் குலசேகர பாண்டியனுக்குப் புத்திரனானன். அப்பாண்டி நாட்டில், மலயாசலமானது துவஜரூபமாக உயர்ந்துள்ளது. அந்தப் பொதிய மலையில், அகஸ்திய மகா முனிவர் பத்தினியோடு எப்பொழுதும் இருக்கின்றார். குலசேகர பூபாலன், புத்திரன் பிறந்தவுடன் தன் பத்தினியோடு அங்கே தங்கி, புத்திரனுக்கு ஜாதகர்ம முதலிய கிரியைகளைச் செய்து, மலயத்துவசன் என்று நாமகரணஞ் செய்தான். அந்தணர் முதலிய நான்கு வருணத்தாரும் "அகஸ்திய மகாமுனிவர் அனுக்கிரகத்தினற் பெற்ற புத்திரனுக்கு அம்முனிவருக்கு உறைவிடமாகிய மலையினது பெயரையிட்டது பெரிதும் அழகாயிருக்கிறது" என்று மகிழ்ந்து புகழ்ந்தனர். அம் மலயத்துவஜன் பிறைமதிபோல் முறையே வளருவானாயினன். ஐந்தாவது பிராயத்திலே, வித்தியாரம்பம் செய்விக்கப்பெற்று சமஸ்கிருதம், தமிழ் முதலிய பாஷைகளிலும், யானையேற்றம், குதிரை யேற்றம் முதலியவற்றிலும் வல்லவனாயினன். பின்பு ஆறுவது பிராயத்திலே,

குலசேகர பாண்டியன் தன்னுடைய குலாசாரியனைக்கொண்டு புத்திரனுக்கு உபநயநஞ் செய்வித்து வேதவேதாங்கங்களையும், தனுர்வேதத்தையும், அஸ்திரப் பிரதியஸ்திர மந்திரங்களையும் முறையேசொல்லுவித்தான். பின்பு புத்திரனுக்கு மணப்பருவம் வந்தவுடனே, சோழராஜனுடைய புத்திரியை விவாகஞ் செய்யக்கருதி முதியோரை அனுப்பி வினவிச் சம்மதித்தபின்னர், அரசர் முதலாயினோருக்கு விவாகபத்திரம் விடுத்து, மணமண்டபம் நிர்மாணம் செய்து கொண்டபின்பு சுப முகூர்த்தத்தில், சோழ ராஜன், தன்னுடைய மனைவியையும், மற்றுஞ் சுற்றத்தாரையும்,தன்னுடைய ஆசாரியரையும், மற்றைய அந்தணர் முதலானவர்களையும் மற்றும் விவாகத்திற்கு வரத்தக்கவரையும் தனது அரண்மனைக்கு அழைப்பித்து, அவரவருக்கேற்ப உபசரித்து, அனைவரையும் விவாக மண்டபத்தில் இருத்தியபின்பு, சோழராஜன் எழுந்து நின்று, பெருமகிழ்ச்சியோடு மருகனுக்கு மதுபர்க்கங்கொடுத்து, தன்னுடைய புத்திரி காஞ்சனமாலையாகிய கன்னிகையைத் தானம் செய்தான். பின்பு மலயத்துவஜனும் காஞ்சனமாலையும் மற்றும் மணச்சடங்குகளை விதிப்படி முடித்தனர். பின்னர் அவ்விருவரையும் சிங்காசனத்திலேற்றி, குலசேகரபாண்டியன் மகுடாபிஷேகஞ் செய்து மலயத்துவஜனுக்கு முடி சூட்டினன். பின்பு குலசேகர பாண்டியன், மணக்கோலம் காணவந்தவர் அனைவருக்குந்தக்க

படி சம்மானஞ் செய்து, தத்த மிடங்களுக்குச் செல்ல அனுப்பினன். பின்பு புத்திரனுக்கு அரசாட்சியைக் கொடுத்து, சிலகாலஞ் சென்று அவ்வரசன் முத்தியடைந்தான்.

பின்பு மலயத்துவஜ பாண்டியன், பூமியைப் பரிபாலனஞ் செய்து வரும்பொழுது, புத்திரப் பேற்றை உத்தேசித்து, தொண்ணூற்றொன்பது பரிமேத வேள்வி செய்தான்; செய்தும் தன் கருத்து முற்றுப் பெறுமை பற்றி, புத்திரகாமேஷ்டியாகஞ் செய்தான். செய்யும்போது அந்த யாகாக்கினிமத்தியினின்றும்மீனாட்சிதேவி மூன்று பிராயத்தோடு மூன்று தனங்களுமுள்ள ஓர் கன்னிகையாகத் தோன்றி மலயத்துவஜ பாண்டியன் முன்பு மிக மகிழ்ச்சியோடு நின்றருளினள்.

உடனே மலயத்துவஜ பாண்டியன் பெருமகிழ்ச்சியுற்று அக்கன்னிகையை எடுத்துத் தன்னுடைய பத்தினியிடத்தே கொடுத்து அக்கன்னிகைக்கு மூன்று தனங்களுடைமையால், தடாதகையென்று நாமகரணஞ்செய்தான். பின்பு தக்க பருவம் வந்தபின்பு தடாதகைப் பிராட்டியாருக்கு மகுடாபிஷேகஞ்செய்து முடிசூட்டி அரசாட்சியை ஒப்புவித்துச் சுவர்க்கலோகஞ் சேர்ந்தான்.

தடாதகைப் பிராட்டியார் கன்னிகையாராய் வீற்றிருந்து அரசாட்சி செய்து வந்தார். சிலகாலஞ்சென்று திக்குப்பாலகரை வென்று திருக்

கைலாசபதியாகிய சுந்தரேசுவரரைத் திருமணஞ் செய்து, அந்தக் காமேசுவரராகிய சுந்தரேசருக்குத் தம்முடைய அரசாட்சியை மகிழ்ச்சியுடன் கொடுத்து, அவர் ஆஞ்ஞையின் வழியிலேநின்று மாதாவுடன் அந்தப்புரத்திலே அமர்ந்திருந்தார்.

சுந்தரேசுவரர் சுந்தரபாண்டியரென்னும் திருப்பெயர் பூண்டு, திருநந்திதேவர் முதலாயினோரை அமைச்சர் முதலாயினோராக்கி, அரசாட்சி செய்து கொண்டிருந்தார். அங்ஙனம் இருக்கும்போது மாமியாகிய காஞ்சனமாலையின் பொருட்டு, எழுகடலையும் வருவித்து அவளோடு ஸ்நானஞ் செய்தற்குச் சுவர்கத்திருந்த மாமனாகிய மலயத்துவஜனை வருவித்து, எழுகடல்தீர்த்தத்திலே மூழ்குவித்து, சாரூப்பிய பதவியைக் கொடுத்தருளினர். பின்பு சுந்தரபாண்டியர் மதுரையம்பதியில் வதிந்தருளி அறுபத்தாறுயிர வருஷம் அரசாட்சி செய்து குமாரராகிய உக்கிர பாண்டியருக்குப் பட்டாபிஷேகஞ்செய்து வேல்வளைச்செண்டு கொடுத்து, தடாதகைப் பிராட்டியாராகிய தேவியாரோடும் அந்தர்த்தானமானர்; ஆகையால், இத்திருவாலவாய்க்கு நிகரான க்ஷேத்திரம் கிடையாது. மகாபாதகங்களைச் செய்தவர்களும் அந்த க்ஷேத்திரத்திலே தங்கினல், அப்பாதகங்கள் நாசமாம்.

ஆதலால், தேவியே! அத்திருவாலவாயில் முன்பு ஒரு சரித்திரம் நடந்திருக்கிறது. அதனைக்

கேட்பாயாக. என்னையெனில், திருப்பரங்குன்றத்துக்கு நிருதிதிக்கிலே, திருமங்கலம் என்னும் கிராமத்தில், ஆத்திரேய கோத்திரத்தில், ஒரு பிராமணன் இருந்தான். அவன் வேத வேதாங்கமாதி நூல்களைக் கரைகண்டவன். வேதோக்தசிரவுதக் கிரியையும், சூத்திரோக்தஸ்மார்த்தக் கிரியையும் பிறருக்குச் செய்விப்பதிலேசமர்த்தன். ஆயினும், வேதாந்தார்த்தங்களைப் புகழின் பொருட்டுச் சமஸ்தருக்கும் போதிக்கின்றவன். பலவழியாலும் பொருளைத்தேடுகின்றவன். நீசனிடத்துங்கொடிய தானங்களை ஏற்பவன். பெரிதுங் கொடியவன். மதுபானஞ் செய்பவன். ஸ்மார்த்தன் போலும் வேடம்பூண்டவன். எப்பொழுதும்பிறரை வருத்துகின்றவன். பிறர்மனைவியோடு கூடுகின்றவன். கோபிசந்தனத்தால் ஊர்த்துவபுண்டரம் இட்டுக்கொண்டு, விபூதி ருத்திராக்ஷங்களை இகழ்கின்றவன். அமங்கலியும், மலடியுமான மருகியுடன் சேர்கின்றவன். எல்லாச் சித்தாந்தங்களையும் இகழ்கின்றவன். எல்லாராலும் கொடும்பாவியென்று பேர் பெற்றவன்.

அவன் அங்ஙனமிருந்தபோது, அக்கிராமத்திலே மற்றொரு பிராமணன் கத்தரித் தோட்டம் வைத்து விருத்தி செய்து, அக்காய்களை கொடும்பாவி தவிர மற்றைய அந்தணர் அனைவர்க்குந் தினந்தோறுங் கொடுத்து வந்தான். அக்காய்களைப் பாகஞ்செய்து அனைவரும் நுகர்ந்து மகிழ்ந்

தார்கள். ஒருதினம் திருக்கோயிலுக்குச் சிவதரிசனஞ் செய்யவந்த கத்தரித்தோட்டப் பிராமணனைக் கொடும்பாவிகண்டு, நிரேதுகமாகப் பலவாறு அவமதித்து நிந்தித்து ஒருகாலால் உதைத்தான்.

உடனே உதையுண்டபிராமணன், பாண்டியராஜனிடத்தே சென்று நிகழ்ந்தவைகளைத் தெரிவித்தவளவில், பாண்டியன் அத்தாணி மண்டபத்தே அமர்ந்து, அமாத்தியர் முகமாகக் கொடும்பாவியை அழைப்பித்து, விசாரிக்கும்போது, "கத்தரிக்காய் மாமிசத்திற்கு ஒப்பானதால் அது தள்ளத்தக்கதேயன்றி கொள்ளத்தக்கதன்று. அதனை உண்பவனும் சண்டாளனே. ஆகையால், அந்தச்சண்டாளன் ஆலயத்திற்கு வந்தமைபற்றி ஆலயத்திற்குச் சம்புரோட்சணம் செய்யத்தக்கதே. ஆனதால், அப்பிராமணனை வைதுஉதைத்தேன்" என்று கொடும்பாவி கூறினன். அங்ஙனம் கொடும்பாவி கூறியமொழியை அரசர் முதலாயினோர் கேட்டு ஆச்சரியமடைந்தார்கள்.

அப்பொழுது அகத்தியமகாமுனிவர் பொதியமலையினின்றும் போந்தனர். உடனே அரசன் முதலாயினோர் எழுந்து அகஸ்திய மகா முனிவரை வணங்கி, "ஹே குருமூர்த்தீ! வழுதுணங்காய் வரலாற்றைச் சொல்லியருளவேண்டும்" என்று விண்ணப்பம் செய்ய, அதற்கு முனிவர் மொழிந்தருளுகின்றார். "ஹே பாண்டிய பூபாலப் பஞ்ச

மேட்டிராசுரனுடைய மைத்துனன் பேரன் வார்த்தாகன் என்னும் பெயருடைய ஒருவன் சிவ சின்னங்களாகிய விபூதி ருத்திராட்சங்களைத் தரித்து எப்பொழுதுந் தூய்மை உடையனாகிச் சிவபூஜை செய்துகொண்டிருந்தான்.

அங்ஙனமிருக்கும்போது ஒருதினம் உடையவராகிய சிவலிங்கப்பெருமானுக்குக் கவயசிருங்கத்தினாலே ஸ்ரீ ருத்திரமந்திரங்களை உச்சரித்து அபிஷேகஞ் செய்துகொண்டிருக்குஞ் சமயத்திலே, வைகுண்டத்திலிருந்து கருடாரூடராக விஷ்ணு வந்தனர். வந்தவுடன் எழுந்து விழுந்து வந்தியாமல் மரம்போலிருந்தமையால், விஷ்ணுகோபித்து 'வார்த்தாகனே! கற்பமுடிவுவரையில், விரைவாக நீசெடியாகக்கடவாய்' என்றும், 'அச்செடியிலுண்டாகிய காயும் புசித்தற்குரியதாகாது போகக்கடவது' என்றும் சபித்து, சுவேதத்தீவிற்குப் போயினர். அதன்பின்பு வார்த்தாகாசுரராஜன், தனக்குண்டான சாபத்திற்குப் பயந்து, சிவபிரானைப் பலமுறை புகழ்ந்து, விஷ்ணு சாபத்தை அகற்றும்படி பிரார்த்தித்து மீட்டும் விசேடமாக அருச்சனை செய்து, சந்நிதியிலே நின்றான். நிற்கும்போது, அவ்வருட்குறியினின்றும் சிவபெருமான் தோன்றி, "நம்மாட்டுப் பேரன்புள்ள வார்த்தாகனே! உன்னுடைய பூஜையால், யாம் மகிழ்ச்சியுற்றேம். நமதருட்குறியை நீ பூசித்தமையால் விஷ்ணுவின் சாபத்துக்கு அஞ்சவேண்டாம்.

உனது நாம சம்பந்தமான வார்த்தாகசாகக்கறி யானது பிராமணர் முதலான சமஸ்தருக்கும் புசித்தற்குரியதும், சுகத்தைப் புரிவதும் ஆகுக. விஷ்ணுவுக்கும் விஷ்ணு பத்தருக்கும் உனது சாகம் உரிமையாகாது போகுக. நாம் உனது கறியின் நைவேத்தியத்தினல் மிக மகிழ்ந் தோம். பரான்னம் புசித்த குற்றமும் உனது சாகத்தைப் புசித்தலால் அற்றொழியும். உனது சாகமானது முள்ளோடு கூடியிருந்தால், பிதிர்சிராத்தங்களுக்கு உரித்தாகுக. நம்முடைய பூஜையை உனதுகறியின்றிச் செய்தால், அது விஷ்ணு பூஜையாமன்றி நமது பூஜையாகமாட் டாது. நமதுபூஜைக்குரிய நைவேத்தியங்களுள்ளே உனது சாகம் முக்கியமாதலால் நம்முடைய அன் பர்களுக்கு நீ விருப்பமுடையவனகுக" என்று திரு வாய் மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர். ஆகை யால் வழுதுணங்காய் கொள்ளத்தக்கதேயன்றித் தள்ளத்தக்கதன்று" என்று சொல்லி அகத்திய மகா முனிவர் ஆகாயமார்க்கமாக ஸ்ரீ காசிக்ஷேத் திரஞ் சேர்ந்தனர்.

உடனே பாண்டியராஜன் கொடும்பாவியை மரணபரியந்தம் சிறைக்களத்திற் சேர்ப்பித்தான். பின்பு பாண்டியன் வார்தாகபால வேதியனை நோக்கி, "இனி கொடும்பாவிக்கு அஞ்சாதே" என்று தனமுதலியவற்ருல் உபசரித்துக் கிருகத் துக்கு அனுப்பிவிட்டு, அரசாட்சி செய்து கொண்

டிருந்தான். பின்பு அக் கொடும்பாவி சிறைக் கூடத்தில் விலங்குடன் கிடந்து பசியால் வருந்தித் தானே மரணமாயினன். உடனே இயமதூதர் வந்து அக் கொடும்பாவியை பாசத்தாற் கட்டி இயம ராஜனிடத்துக் கொண்டுபோய் விட்டனர். அப்பொழுது இயமன் சித்திரகுப்தனையழைத்து, விசாரித்து, அக்கொடும்பாவியைக் காலசூத்திர முதலிய நிரயங்களிலே கற்ப முடிவு வரையில் போடும்படி ஆஞ்ஞாபித்து அந்தப்புரத்துக்குச் சென்றனன். இயமன் ஆஞ்ஞைப்படி அக்கொடும் பாவி சிலகாலம்வரை நரகங்களிலே துன்பமனுப வித்து, திருவாலவாயில் மரணமுற்றமையினலே சிவாஞ்ஞைபற்றி அம்மதுரையம்பதியின் அக்கினி திக்கிலே சிந்தாமணி என்னும் கிராமத்தில், தாமந்த இடையன் குலத்தில், தள்ளுபட்ட ஓர் இடையனுக்குப் பிள்ளையாகப் பிறந்தான்.

முன் செய்த தீவினையால், எப்பொழுதும் பிராமணரை நிந்தித்தல், கள்ளுண்டல், பிறர் மனைவியரைப் புணர்தல், கள்ளர்க்கு ஒற்றுமை யாக இருத்தல், புலால் யிற்றல், சைவவைணவங் களை நிந்தித்தல், ஒரு கொள்கையுமின்றி நாஸ்தீ கனைகயிருத்தல் என்னுங் கொடுஞ்செய்கை உடை யனயிருந்தான். "அப்பாவியைப் பிறவிக் கடலி னின்றும் எடுத்து முத்திக்கரையிற் சேர்க்க வேண்டும்" என்று, சுந்தரேசர் திருவுளங் கொண்டு, சமீபத்திலிருக்கிற மீனட்சி தேவியை

நோக்கி "ஹே தேவி! அக்கொடும்பாவியாகிய இடையனுக்கு முத்தி கொடுக்கவேண்டும். அவன் கொடும்பாவியாயினும் எப்பொழுதும் நமதருளினாலே வேளாண்மை நிமித்தம் பசுக்களைப் பரிபாலனஞ் செய்து வருகிறான். ஒவ்வொரு வருஷத்திலும் ஒவ்வொரு குரோசதூர பூமி சேர்க்கின்றான். ஆயினும், பிராமணர் பூமிதவிர மற்றையோர் பூமிகளைச் சேர்க்கின்றான். தரிசுகளான காடுகளைத் திருத்துவதிலே பெரிதுங்கருத்துடையவன். இப்பெற்றியுடையானுக்கு முத்தி கொடுத்தால் நமக்குப் பெரும் புகழாம். அதற்குவேண்டும் உதவி நீ செய்யவேண்டும். அஃதென்னையெனில், தேவீ! நீ பசுவாகி அவ்விடையன் வயலிலேயுள்ள பயிரை மேய்வதுபோலக் காட்டினால், அவன் தடி கொண்டுஅடிக்கவருவான். அப்போதுநீஓடுதலைச் செய்தால் அவனும் வேகத்துடன் உனதுவாலைக் கைகளாற் பற்றிக்கொண்டு ஓடிவருவான். நீ இத் திருப்பதியின் கோட்டை வீதிமுதல் அஞ்சு வீதிகளிலும் வலம்வருமுறையாகவே சுற்றிக்கொண்டு ஆடி வீதியில் நமது சந்நிதியிலிருக்கின்ற இடபத்தின்பின்னே அக் கொடும்பாவியைத் தள்ளிவிட்டுப் பசுவடிவை ஒழித்து நமதருகிலே தங்கக்கடவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

தேவியாரும் சிவபிரான் ஆஞ்ஞைப்படி உடனே கோவடிவெடுத்து, அக்கொடும்பாவியின் கழனியினிலேபோய் மேய்வது போல நின்றார்.

உடனே அவ்விடையன் அப்பசுவைத் தடி கொண்டு புடைக்கவரும்பொழுது, அஞ்சி, ஓடவும் அதன்வாலை அவ்விடையன் கைகளால் நன்ருகப் பற்றிக்கொண்டு தொடர்ந்து, கீழ்திசை முதலாக முறைப்படி கோட்டைவீதி, மாசிவீதி, ஆவணிவீதி, சித்திரைவீதி, ஆடிவீதி என்னும் ஐந்து திருவீதி களையுஞ் சுற்றிக்கொண்டு ஆடி வீதியிலே சுந்த ரேசுவரரது சந்நிதியிலிருக்கிற இடபதேவரின் பின்புறத்தே அவ்விடையனை வீழ்த்தி கோ வுருவை மறைத்துத் தேவுருவங் கொண்டு சுந்த ரேசருடனே ஆலயத்தில் அமர்ந்தருளினர்.

விழுந்தவன் தூல சரீரத்தைவிட்டுச் சூக்கும சரீரத்தோடு தேவவிமானத்தேறித் தேவர்கள் உபசரிக்கும்படி நிற்கும்போது, சுந்தரேசர் உமா தேவி சமேதராக இடபாரூடராய் தரிசனங் கொடுத்து, 'கோபாலா உன்ருற் செய்யப்பட்ட பாவக் கூட்டம் முழுவதும் நம்முடைய கருணலே சத்தாலே ஒழிந்தது. ஆகையால் நீ சுத்தாத்மா வாய் நித்தமும் நமது கயிலாயத்திலே வசிப்பாய்' என்று திருவாய் மலர்ந்தருளி 'உனக்கு முத்தி கொடுத்த இத்தினமாகிய மார்கழி மாசத்துக் கிருஷ்ணபட்ச அட்டமியில், யாவராயினும் பொற் ருமரைத் தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து, நித்த நியமங்களை நிறைவேற்றி, சூரியோதய காலத்தில், கிழக்குத்திசை முதலாகத் தொடங்கி அன்புடன் வாக்கினலே வேதபாராயணமாதல், ஸ்ரீ ருத்திர

பாராயண மாதல் ஸ்ரீ பஞ்சாட்சர ஜபமாதல் செய்து கொண்டும், மனசினுலே ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரரைத் தியானித்துக்கொண்டும் காயத்தினுலே தைவீதியையும், மாசிவீதியையும், ஆவணி வீதியையும், சித்திரை வீதியையும், ஆடி வீதியையும், சுவாமி கோயில் இரண்டாம் பிராகா ரத்தையும், முதற் பிராகாரத்தையும், அம்மை கோயில் இரண்டாம் பிராகாரத்தையும் முதற் பிராகாரத்தையும் வலம் வந்து, சித்திவிநாயகக் கடவுளையும், முருகக் கடவுளையும், மீனுட்சியம்மை யையும் நமஸ்கரித்து, தரிசித்து, துதித்துப் பிர தக்ஷிணஞ் செய்து, பள்ளியறைக் காமேசுவரி யம்மையையும் மனசினுலே சிந்தித்துக்கொண்டு வலமுறையாகச் சுவாமி சந்நிதிக்குப்போய், நமஸ் கரித்து, துவஜத்தம்பத்துக்கு ஈசானதிக்கிலிருக் கிற கனகரத்ந சபையிலே திருநிருத்தஞ் செய்யும் ஸ்ரீ நடராஜ மூர்த்தியைத் தரிசித்துத் துதித்து வலம்வந்து, பின்பு மூலலிங்க மூர்த்தியையுந் தரி சித்துத் துதித்து, வெள்ளியம்பலவாணரையும், சந்திர சேகரரையும், தக்ஷிணு மூர்த்தியையும், சோமாஸ்கந்த மூர்த்தியினையும், மற்றைய மூர்த்தி களையும் தரிசித்துத் துதித்து வெளியில் வந்து, சந்நிதியிலே நமஸ்கரித்து வடதிசை நோக்கி வதிந்து, ஸ்ரீருத்திரம் பதிஞேருமுறையும், ஸ்ரீபஞ் சாட்சரம் ஆயிரத்தெட்டுருவும் மேதாவித்தியா சிற்சத்திமந்திரங்களும் ஜபித்துத் தங்கள் கிருகங் களை அடையக்கடவர். அடைந்து, தங்கள் பொரு

ளுக்கேற்ப நெய், தேன், தயிர் மூன்றோடு சிவபத்தர்களாகிய அந்தணர்களுக்குப் போஜனஞ் செய்வித்துப்பின்பு சேஷத்தைப் புசித்து ஆசீர்வாதம் பெறக்கடவர். ஆகையால் புத்திமுத்திகளை விரும்புவோர் வருஷந்தோறும் முறையாக இங்ஙனம் நடத்தல் வேண்டும்.

மார்கழிமாசத்து அமரபட்சத்து அட்டமிதிதியில் எவ்விடத்தேயிருப்பினும், அவ்விடத்துள்ள சிவாலயத்திலே சுந்தரேசுவரரை மனசிலே தியானித்துக்கொண்டு, ஏழு வீதிப் பிரதட்சிணத்தையுஞ் செய்யவேண்டும். அப்படி ஏழுவீதி இல்லாவிடில், இருக்கிற வீதியில், ஏழு பிரதக்ஷிணஞ் செய்து, முன்சொல்லிய வண்ணம் ஸ்ரீ ருத்திர பாராயண முதலியன செய்ய வேண்டும். சிவாலயமில்லாதவூரில் வில்வவிருட்சத்தைப் பிரதக்ஷிண முதலியன செய்யவேண்டும்.

பிரதக்ஷிணஞ்செய்யாதவரையில் பாசக்கட்டு மாநுடருக்கு நீங்காது. வலம் வரும் போது எறும்புக் குழிகளுக்கு அரிசியிடவேண்டும். அவ்வரிசியிடுபவன் இலக்ஷப்பிராமண போஜனஞ் செய்வித்த பலனை அடைவான். அட்டமிப் பிரதக்ஷிணஞ் செய்வதால், ஒரு அடிக்கு ஒரு அசுவமேதயாகஞ் செய்த பலன் உண்டாகும். எந்த வருணத்து ஆடவராயினும், மகளிராயினும், சண்டாளராயினும் பிரதக்ஷிணம் புரிந்தால் அவர் முத்தியடைவது நிச்சயம்.

தைவீதி முதலாக ஏழு வீதியும் வலம்வர முடியாதவர் ஆடிவீதியையே ஏழுமுறை வலஞ்செய்தால் ஏழு வீதியும் வலஞ்செய்த பயனை அடைவார். பின்னும் ஸ்ரீ ருத்திர பாராயணம் ஒரு முறை செய்தாலும், பதினோரு முறை செய்த பயனை அடைவார். ஸ்ரீ பஞ்சாட்சரம் நூற்றெட்டுருஜபஞ் செய்தாலும் ஆயிரத்தெட்டுரு ஜபஞ் செய்த பயனை அடைவார். சிவபத்தியையுடைய வேதியர் பதினொருவருக்காவது, சைவசந்நியாசி ஒருவருக்காவது அன்புடன் பூசித்து அன்னம் உண்பித்தாற் பெரும்பயன் பெறலாம்".

இவ்வாறு சுந்தரேசுவரர் மீனாட்சிதேவியாருக்கு அனுக்கிரகஞ் செய்து தேவியாரோடு மூலலிங்கத்தில் அந்தர்த்தானமாயினர்" என்று ஆசாரியார் மாணாக்கனுக்கு அருளிச் செய்தார். பாச நீக்கத்தின் பொருட்டு உமாதேவிசமேதராகிய பரசிவோபாசனைசெய்து பரசிவபூஜை செய்தல் வேண்டும். முத்திக்கு நேரேகாரணமாகிய சிவஞானம் ஆசாரியர் திருவருளாலன்றிக் கிட்டாதாகையால் அவ்வருட்குரவரது திருவடிகளையே வழிபடல் வேண்டும். இம்முறையாக, ஸ்கந்த புராணத்திலுள்ள, பிரமசங்கிதையில், முப்பத்துநான்காம் அத்தியாயம், குருகீதையிலே கூறப்பட்டிருக்கின்றது.

அஷ்டமிப்பிரதக்ஷிணமான்மியம் முற்றியது.

மெய்கண்டதேவர் திருவடி வாழ்க.

சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.

56771
923:226x
3154
PUBLIC LIBRARY